2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(அஊ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[திரு. கே.சி. வீரமணி] [2020 செப்டம்பர் 16

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இச்சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலே எதிர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தங்களின் கருத்து பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

பிற்பகல் 1–45

10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2020–2021, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினத்திற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளத்தால் பொய்யாது ஒழுகி,*